# ஐக்கிய நாடுகள் விசாரணை அறிக்கை:

## விளக்கங்களும் குறிப்புகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பின்புலம் ............ 3

விசாரணைக் குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணை ............ 4

விசாரணை எப்படியாகத் தன் பணியை மேற்கொண்டது? 5

சாட்சியின் நியமம் ............ 7

கண்டுபிடிப்புக்கள் ............ 7

இலங்கைப் பாதுகாப்புப்படையினர் பற்றிய கண்டுபிடிப்புக்கள் ............ 8

விடுதலைப் புலிகள் அமைப்பு பற்றிய கண்டுபிடிப்புக்கள் ............ 14

பரிந்துரைகள் ............ 17

நிறுவன சீர்த்திருத்தங்கள் ............ 18

நீதிக்கான உரிமை ............ 19

உண்மைக்கான உரிமை ............ 21

திருத்தியமைப்புக்கள் தொடர்பான உரிமை ............ 22

முடிவு ............ 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்புலம்

• மே 2009ல் யுத்தம் முடிவுற்றதும் பொறுப்புக்கூறுதல் தொடர்பான விடயங்களுடன் இடைப்படுவதாக முன்னைய ஜனாதிபதி ராஜபக்ஸ ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகத்துடன் ஒப்பமிட்டு இணைந்து வெளியிட்ட கூற்றறிக்கையிலே வாக்குப்பண்ணியிருந்தார்.

• அரசாங்கம் இதற்கு அமைவாக நடக்காததால், தனக்கு ஆலோசனை வழங்கும்படி ஒரு நிபுணர் குழுவின் உதவியை செயலாளர் நாயகம் பெற்றுக்கொண்டார். அந்த மூவர் கொண்ட நிபுணர் குழு தமது அறிக்கையை 2011 இலே தயாரித்தது. யுத்தத்தின் இறுதிக் கட்டத்திலே போர்க்குற்றங்களும் மனுக்குலத்துக்கு எதிரான குற்றச்செயல்களும் இழைக்கப்பட்டதாக நிபுணர் குழுவின் அறிக்கை கூறியது.

• மார்ச் 2014ல், மனித உரிமைகள் பேரவையானது இலங்கையிலே இன்னுமொரு விசாரணையை மேற்கொள்ளத் தீர்மானித்தது. அதன் இறுதி அறிக்கை செப்டம்பர் 16 அன்று (புதன்கிழமை) 2015 வெளிவிடப்பட்டது.

• அந்த அறிக்கையானது அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய இருதரப்பினருமே குற்றச்செயல்களிலே ஈடுபட்டிருந்ததாகம் அவைகள் ஒரு நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படும், அவை சர்வதேச குற்றச்செயல்களான போர்க்குற்றங்கள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுக்குலத்துக்கு எதிரான குற்றங்களாக கருதப்படும் என்றும் கூறியிருந்தது. அந்த அறிக்கையானது யுத்தத்தின்பின்பும் பல மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருப்பதாகக் கூறியது.

- உண்மையையும், நீதியையும் மக்களுக்கான இழப்பீட்டையும் அரசாங்கம் கூடுமானவரைக்கும் வழங்கவேண்டும் என அது சிபாரிசு செய்திருந்தது. சர்வதேச நீதிபதிகள், வழக்குத்தொடுனர், விசாரணையாளர்கள் மற்றும் சட்டத்தரணிகளின் பங்கேற்புடனான ஒரு கலப்பு நீதிமன்றம் அதற்குள் உள்ளடங்கும்.

- மனித உரிமைகள் பேரவையிலே இலங்கையின் ஆதரவையும் பெற்றிருந்த நிலையிலே நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானமானது வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய நீதிபதிகள், வழக்குத்தொடுனர், விசாரணையாளர்கள் மற்றும் சட்டத்தரணிகளின் பங்கேற்புடனான ஒரு விசேட நீதிமன்றத்தை கலப்பு நீதிமன்றம் என்ற சொல் பிரயோகிக்காமல் கலப்பு நீதிமன்றத்தின் விசேட அம்சங்களை உள்ளடக்கியிருந்தது.

## விசாரணைக் குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணை

விசாரணையின் ஆணை எதுவெனில் 21 பெப்ரவரி 2002 இலிருந்து 15 நவம்பர் 2011 வரைக்குமான காலப்பகுதிக்குள் இடம்பெற்ற மனித உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீறல்களையும் ஒத்த குற்றச்செயல்களையும் விசாரிப்பதாகும். இந்த விசாரணையானது "குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்கள் மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய உண்மைகளையும் அவற்றின் சூழ்நிலைகளையும் நிலை நிறுத்தும் படி" வேண்டப்பட்டது. இந்த விசாரணையானது பொருத்தமான "நிபுணர்கள் மற்றும் விசேட முறைமைகளுக்கான ஆணை கொண்டு உளோர்களின்" உதவியைக் கோரிப் பெற்றுக் கொள்ளலாம்.

## விசாரணை எப்படியாகத் தன் பணியை மேற்கொண்டது?

இந்த விசாரணையானது ஐ.நா. ஸ்தாபனத்திடம் ஏற்கெனவே கைவசம் உள்ளதான பரந்துபட்ட ஆவணங்களை பரிசீலித்தது. விசாரணை அணியானது ஏற்கெனவே உள்ள சான்றுகளை ஆய்வு செய்தது. அவைகள் அரசாங்கப் பதிப்புக்கள், சர்வதேச மற்றும் இலங்கையின் அரச சார்பற்ற ஸ்தாபன அறிக்கைகள், எல். எல். ஆர். சீ இன் அறிக்கை, மற்றும் இலங்கை அரசின் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைகள், காணொளி ஆவணங்கள், துணைகோள் (satellite) படங்கள், நிபுணர் குழவின் அறிக்கை, ஐக்கியநாடுகள் விசேட நடைமுறைகள் அமைப்புக்களின் அறிக்கைகள் போன்றவைகளை உள்ளடக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது விசாரணையின் காலகட்டத்திற்குள் விசாரணையாளர்கள் இலங்கைக்குகள் வர அனுமதிக்கப்படவில்லை. ஆயினும், விசாரணையாளர்கள் பாதிக்கப்பட்டோர் சமர்ப்பிப்புக்களை சமர்ப்பிக்கும்படி ஆகஸ்ட் 4ம் திகதி 2014 அன்று பகிரங்க அழைப்பு விடுத்திருந்தனர். அதன் பிரதிபலனாக, மின்னஞ்சல் மூலமாக 1985 சமர்ப்பிப்புக்களும் தபால் மூலமாக 1197 சமர்ப்பிப்புக்களும் கிடைக்கப்பெற்றன. கிடைக்கப்பெற்ற தனிநபர் சமர்ப்பிப்புக்களுள் 329 இலங்கையில் இருந்து கிடைக்கப்பெற்றவை. அந்த அறிக்கையானது மனித உரிமைகள் பேரவைக்கும், இதர மனித உரிமைகள் பொறிமுறைகளுக்கும் அரச அலுவலர்களால் எழுத்துமூலமாகவோ பேச்சுமூலமாகவோ விடுக்கப்பட்ட கூற்றுக்களை விசாரித்ததுடன், எல். எல். ஆர். சீ இற்கு அரசாங்கமும் படை அலுவலர்களும் வழக்கிய எழுத்தாவணங்களிலும் மற்றும் அரசாங்கம் விடுத்த பகிரங்க அறிக்கைகளையும் விசாரித்தது. விசாரணைக் குழுவானது புதுப்பிக்கப்படாத ஆயினும் முன்னர் தயாரிக்கப்பட்ட சர்வதேச ஆணைக்குழு போன்றதான பல அறிக்கைகளையுங்கூடப் பெற்றுக்கொண்டது.

இந்த அறிக்கைக்காக களத்தில் இறங்கிய விசாரணையாளர்கள் சுமார் 50 நபர்களிலிருந்து நேரடியான வாக்குமூலங்களை பெற்றுக்கொண்டனர். அவர்களுள் கற்பழித்தலுக்கு உள்ளான ஆண்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுமான 30 பேரும் அடங்குகின்றனர். இவை இலங்கைக்கு வெளியே 6 நாடுகளிலே இடம்பெற்றது.

இந்த விசாரணையாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யாவிட்டாலுங்கூட (அனுமதிக்கப்படவில்லை), இலங்கையில் இருந்த பல விபரமான சான்றுகளைப் பெற்றுக்கொண்டது.

## சாட்சியின் நியமம்

விசாரணையின்போது சாட்சியத்துக்குப் பயன்படுத்தப்பட்ட நியமமானது, "நம்புவதற்கு உரிய தகுந்த அடித்தளம்" என்பதாகும். ஒவ்வொரு சம்பவத்துக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட தகவல் மூலத்தில் இருந்து போதிய தகவல்கள் கிடைக்கப்பெறுவதை அவர்கள் உறுதிசெய்தனர். உதாரணமாக, குறித்த தடைமுகாம் ஒன்றிலே கற்பழிப்புச்சம்பவம் இடம்பெற்றதாக ஒருவர் சாட்சியம் கொடுத்திருந்தால், அதே தடைமுகாமிலே கற்பழிப்பு இடம்பெற்றதாக வேறொரு சாட்சியோ அல்லது நம்பத்தகுந்த தகவல்கள் மூலமோ இருந்தாற்ததான் அந்தத் தகவல் ஏற்றுகொள்ளப்படும்.

## கண்டுபிடிப்புக்கள்

இந்த அறிக்கையானது பல கண்டுபிடிப்புக்களைச் செய்துள்ளது. அவைகள் ஒரு நீதிமன்றத்துக்கு முன்பதாக நிரூபிக்கப்பட்டால் அவைகள் மனித உரிமைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீறல்களாவே அல்லது போர்க்குற்றங்களாகவோ அல்லது மனுக்குலத்துக்கு எதிரான குற்றங்களாகவோ கணிக்கப்படும். இதனாலேதான் அந்த அறிக்கையானது இலங்கையிலே ஒரு கலப்பு நீதிமன்றம் உருவாக்கப்படுவதைப் பரிந்துரை செய்கிறது. அறிக்கையின் கண்டுபிடிப்புக்கள் வெறுமனே இறுதி யுத்தக் கட்டங்களில் மாத்திரம் நோக்கக்குவியம் செலுத்தவில்லை. மாறாக, அதன் ஆணைக்கு உட்பட்டதான பெப்ரவரி 2002 முதலான கால எல்லைக்குள்ளே நோக்கக்குவியம் செலுத்தியது. உதாரணமாக "வெள்ளைவான் ஆட்கடத்தல்" உட்பட, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைத்துள்ளமை பற்றியுமான பல கண்டுபிடிப்புக்களை அறிக்கை கொண்டுள்ளது.

## இலங்கைப் பாதுகாப்புப்படையினர் பற்றிய கண்டுபிடிப்புக்கள்.

அறிக்கையானது இலங்கை பாதுகாப்புப்படையினர் பற்றிய பல கண்டுபிடிப்புக்களைக் கொண்டுள்ளது.

### *காணாமற்போகச் செய்தல்கள்*

பலவந்தமாக் காணாமற் போகச் செய்தல்கள் பல தசாப்த காலமாக இடம் பெற்று வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாயிரக் கணக்கானோரைப் பாதித்துள்ளதாக அறிக்கை கண்டுபிடித்துள்ளது. 2014ல் பலவந்தமாகக் காணாமற்போகச் செய்தல்கள் தொடர்பான ஐ.நா. செயலாற்றும் குழுவானது அப்படியான காணாமற்போகச் செய்தல் பற்றி 12,536 புகார்களைப் பெற்றிருந்தது. உலகிலேயே இதுதான் இரண்டாவது அதியுயர் காணாமற்போகச் செய்யப்பட்டோர் எண்ணிக்கையாகும். மேலும் இலங்கையின் சிறிய சனத்தொகையின் பின்புலத்திலே, இந்த எண்ணிக்கையானது கணிசமான முக்கியத்துவம் பெற்றதாகும்.

நாடெங்கிலும் காணாமற்போகச் செய்தல்கள் இடம்பெற்று வந்துள்ளதென விசாரணையாளரின் ஆய்வு கண்டுகொண்டுள்ளது. ஆனாலும் 2002 முதல் 2011 வரைக்குமான கால எல்லைக்குள் அநேகமான சாட்சியங்கள் வட மாநிலத்திலிருந்து, குறிப்பாக மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களிலிருந்து வந்தவை.

கடந்த வருடங்களில் வலிந்து காணாமற்போகப்படு வோர்களுக்கான ஐ.நா. செயலாற்றும் குழுவானது பிரமிப்பூட்டும் அளவுக்கான தகவல்ககளைப் பெற்றுக் கொண்டது. அதன் மூலம் பாதுகாப்புப்படையினரின் நேரடியான ஈடுபாடு வலிந்து காணாமற்போகப் பண்ணுதலிலே இருந்துள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் பகுதிகளிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் பெற்ற காணாமற்போகப் பண்ணுதல்களுக்கு இலங்கைக் கடற்படை பொறுப்பாக இருந்துள்ளது. மேலும் பாதுகாப்புப்படையினரின் மூர்க்கத்தனமான முறையில் காணாமற்போகப் பண்ணும் நடவடிக்கைகள் ஆயுதக் குழுக்களுடன் கூட்டுச் சேர்ந்து, குறிப்பாக 2004ல் முதல் கருணா குழுவினருடன் கூட்டுச் சேர்ந்து மேற்கொள்ளப்பட்டதென்பதையும் அறிக்கை கண்டுபிடித்துள்ளது.

*பாலியல் வன்முறை*

இலங்கை ஆயுதப்படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள மோசமான பாலியல் வன்முறைகள் அறிக்கையின் மிகவும் மனக்குழப்பம் மிக்கதான கண்டுபிடிப்புக்களுள் ஒன்றாகும். பாலியல் வன்முறைகள் தடுப்பு முகாம்களிலும் மற்றும் மனிக் பண்ணை முகாமிலும் ஆண்கள் பெண்கள் ஆகிய இருபாலாருக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ளன. மனிக் பண்ணைக்குள் பெண்களுக்கு எதிரான கற்பழிப்புக்கள் மற்றும் பாலியல் துன்புறுத்தல்கள் நிகழ்ந்துள்ளமை பற்றி பல குற்றச்சாட்டுக்கள் பெறப்பட்டுள்ளன. சில தருணங்களிலே பெண்கள் குளித்துக் கொண்டிருக்கும் போதோ, உணவுக்காக வரிசையிலே நிற்கும்போதோ அல்லது விறகு பொறுக்கச் செல்லும்போதோ இச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்துவைக்கப்பட்டவர்கள் விசாரணைக்கு வழங்கிய தமது சாட்சியத்திலே அவர்கள் பலதடவைகள் கற்பழிக்கப்பட்டதாகவும், சில வேளைகளிலே மாதக் கணக்கிலே கூட்டுவன்புருத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாயும் கூறியுள்ளனர். தடுத்து வைக்கப்பட்டவர்கள் தம்மீது இழைக்கப்பட்ட பாலியல் வன்முறைகளின் பல்வேறு முறைகளை விபரித்தனர். அவைகளுள் உட்தொடையிலே அடித்து உதைத்தல், அந்தரங்க உறுப்புக்களிலே மிளகாய்த்தூள் போடுதல், இரும்பு அல்லது கம்பியை ஆண்குறிக்குள் செலுத்துதல், மார்பகங்களைக் குறடுகொண்டு நசுக்குதல் போன்றவைகளும் உள்ளடங்கும்.

### *போரின்போது நடத்தை*

யுத்த நடத்தையின்படி, சர்வதேசச் சட்டப்படி ஒரு தரப்பினரின் மீறுதல் மற்றத்தரப்பினரின் தப்பான செயல்களை நியாயப்படுத்தாது என்பதை அறிக்கை குறிப்பிட்டுக்காட்டுகிறது. இராணுவத்தின் சிரேஷ்ட தலைவர்களால், எல்.எல்.ஆர்.சீ இன் முன்னிலையிலே விடுக்கப்பட்டவை உள்ளடங்கலாகப் பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்ட கூற்றுக்களின்படி, ஆளில்லா விமானங்கள் யுத்த வலயத்தின் மெய்யான படங்களைப் பெற்றுக்கொள்ள உதவியாதாகத் தெரியவந்துள்ளதை அறிக்கை குறிப்பிட்டுள்ளது. அந்தப் படங்கள் சில குறித்த இராணுவ நோக்கங்களை இலக்கு வைப்பதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானத்தின் மீது நேரடியாகச் செல்வாக்குச் செலுத்திட உதவியது. அப்படி இருந்துங்கூட, இலக்குகளின் தன்மை, மற்றும் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களின் வகைகள் போன்றவைகளை நோக்குகையில், பாதுகாப்புப் படையினர் எவரெவர்கள் பாதிக்கப்படுவார் என்பதைப்பற்றிக் கருத்திக் கொள்ளாது கண் மூடித்தனமானத் தாக்கியுள்ளதாக அறிக்கை கண்டுபிடித்துள்ளது. குறிப்பாக வைத்தியசாலை உட்பட பல பொதுமக்கள் இலக்குகள் திரும்பத்திரும்பத் தாக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்த குடிமக்கள் பலதடவைகள் ஷெல்தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. சில சந்தர்ப்பங்களிலே அரசாங்கம் ஆள்கூறுகள் வகுத்துத் தெரிவித்த வைத்தியசாலைகளுங் கூட ஷெல்தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. ஆனால் அரசாங்கம் ஆள்கூறுகள் வழங்கியிராத ஒரு வைத்தியசாலைக்கோ ஷெல்தாக்குதல் நிகழவில்லை.

### *மனிதநேய உதவிகள் வழங்கப்படாமை*

செப்டம்பர் 2008 முதல் யுத்தத்துக்கு உள்ளான பிரதேசத்துக்கான உணவு மற்றும் மருந்து விநியோகத்தை அரசாங்கம் வெகுவாகக் குறைத்திருந்தது. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களிலே யுத்தம் இடம்பெறும் வன்னிப் பிரதேசத்திலே எத்தனை குடிமக்கள் இருக்கின்றனர் என்பதைப்பற்றியும் அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதநேயத் தேவைகள் பற்றியும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கத்துக்கு பல மூலகங்களும் கருவிகளும் இருந்துள்ளன. வன்னியிலே பணியாற்றிவந்த அரசாங்க அதிபர், அரச சுகாதாரப் பணியாளர்கள், அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் மற்றும் வானூர்திப்படங்கள் போன்றவை அவற்றுக்குள் உள்ளடங்கும். அப்படியிருந்தும், வன்னிக்குள் உணவு மற்றும் மருந்து விநியோகம் பற்றிய பேச்சு எழும்போதெல்லாம் வன்னிக்குள் ஆக 70,000 குடிமக்கள் மாத்திரமே உள்ளதாக அரசாங்கம் திரும்பத்திரும்ப வலியுறுத்தி வந்துள்ளது. ஆயினும் மே 2009ல் யுத்தம் முடிவுற்றபோது யுத்த வலயங்களை விட்டு வெளியேறி வந்த 284,000 குடிமக்கள் இடைத்தங்கல் முகாம்களுக்கு அனுமதிக்கப்பட்டதாக அரசாங்கம் அறிவித்தது. யுத்தத்தின் இறுதிக் கட்டங்களிலே பல பொதுமக்கள் பசியினாலும், களைப்பினாலும், மருத்துவசேவைகள் கிடைக்கப்பெறாமலும் அடிப்படையான தங்குமிடம் இல்லாமையாலும் மரித்துள்ளதாக சான்று வழங்கியோரின் சாட்சியத்தை அறிக்கை பெற்றுக்கொண்டுள்ளது. மேலும் யுத்தத்தின் இறுதிக்கட்டத்திலே தப்பி உயிர் பிளைத்தவர்களுக்குள் ஊட்டச்சத்தின்மையும் மோசமான ஊட்டக்குறைபாடும் நிலவியமை பற்றிய அறிக்கைகளும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தின் முடிவிலே நிறுவப்பட்ட உள்ளக இடம்பெயர் அகதிகள் முகாம்கள் மோசமானவை என்பதை அறிக்கை கண்டு கொண்டுள்ளது. அடிப்படையான சுகாதார வசதிகள், மருந்துவசேவைகள் மற்றும் அடிப்படைக் குடிசை வசதிகள் போன்றவைகளிலே குறைபாடுகள் இருந்துள்ளன. ஒருசில முகாம்வாசிகள் பசியினால் மடிந்தும் உள்ளனர். சர்வதேசச் சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படக்கூடிய காலத்திலும்பார்க்க நீடிய காலகட்டத்துக்கு மனிக் முகாம் மற்றும் இதர முகாம்களின் முகாம்வாசிகளுக்கு விடுதலை மறுக்கப்பட்டிருந்தது. சித்திரவதைகளும், கற்பழிப்பும் ஆட்கடத்தல்களும் அந்த முகாம்களுக்குள் இடம்பெற்றுள்ளன.

## விடுதலைப் புலிகள் அமைப்பு பற்றிய கண்டுபிடிப்புக்கள்

இந்த அறிக்கையானது விடுதலைப்புலிகளுக்கு எதிரான பால கண்டுபிடிப்புகளையும் கொண்டுள்ளது. இந்தக் கண்டுபிடிப்புக்கள் சட்டபூர்வமற்ற கொலைகள், தமது படைக்கு வலிந்த ஆட்சேர்ப்பு, சிறுவர் போராளிகளையும் ஆட்சேர்த்தல், யுத்தத்தின்போது நடத்தை, மற்றும் பொதுமக்களின் நகர்விற்கான சுயாதீனத்திலே விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் போன்றவை பற்றியதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *சட்டபூர்வமற்ற கொலைகள்*

புலிகளின் கண்மூடித்தனமான தற்கொலைக் குண்டுதாரிகள் மற்றும் கிளைமோர் கண்ணிகளின் பயன்பாடுகளால் கொல்லப்பட்ட அல்லது காயமுற்ற குடிமக்கள் பற்றியும் அறிக்கை கவனத்தில் எடுத்துள்ளது. மேலும் தமக்கு எதிரான தமிழ்க்கட்சிகள், தகவல் வழங்குவோராகச் சந்தேகிக்கப்பட்டவர்கள், புலிகளுக்கு எதிராகப் பேசிய இதர முக்கியமான தமிழர்கள் போன்றவர்களையும் அவர்கள் இலக்கு வைத்திருந்தனர். யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின்போது, யுத்த வலயத்தை விட்டு வெளியேற முயற்சித்த தமிழ்க் குடிமக்கள் மீது புலிகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்து உள்ளது.

### *படைக்குச் சிறுவர்களின் ஆட்சேர்ப்பு*

சிறுவர்களை இயக்கம் தமது படைக்குச் சேர்த்தமை பற்றியும் அவர்களை யுத்தத்திலே பயன்படுத்தியமை பற்றியும் விரிவான தகவல்களை அறிக்கை கண்டுகொண்டுள்ளது. இந்த நடைமுறைகள் யுத்தத்தின் இறுதிக் கட்டத்திலே உச்சநிலையை எட்டின. வலயன்மடம் திருச்சபையிலே தஞ்சம் கோரிவந்த நூற்றுக்கணக்கான சிறுவர்களைக் கடத்திச் சென்றுள்ள சம்பவமும் அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கருணா குழுவும் தமிழ் மக்கள் விடுதலைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகள் அமைப்புங்கூட சிறுவர்களை ஆட்சேர்த்துள்ளமை தொடர்பான தகவல்களை அறிக்கை கண்டுபிடித்துள்ளது.

### *யுத்தத்தின்போது நடத்தை*

யுத்தத்தின் இறுதிக்கட்டங்களிலே செறிவாக மக்கள் வாழும் வலயங்களுக்குள் விடுதலைப்புலிகள் தமது இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தியமைபற்றி நி அறிக்கை கண்டுகொண்டுள்ளது. ஆயினும் வைத்தியசாலைகள் போன்ற குடிமக்கள் வசதிகள் விடுதலைப் புலிகலினால் இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தியமைபற்றி பற்றிய சான்றுகள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் மருத்துவ வசதிகள் கிடைக்கும் இடங்கள் உள்ளிட்டதான குடிமக்கள் பிரதேசங்களிலே மீண்டும் மீண்டுமாக தமது இராணுவ அரண்களை அமைத்ததுடன் இராணுவத் தளபாடங்களையும் வைத்திருந்துள்ளது. இந்த நடவடிக்கையானது குடிமக்களை இராணுவ நடவடிக்கைகள் அவர்களைச் சூழ இடம்பெறும் ஆபத்துக்குள் இட்டுச் சென்றுள்ளது. இப்படியாக விடுதலைப்புலிகள் நடந்து கொண்டுள்ளமையானது குடிமக்களையும் குடிமக்கள் உடைமைகளையும் பாதுகாத்திட அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டியதான கடப்பாடுகளை மீறுவதாய் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நகர்விற்கான சுயாதீனத்திலே விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள்*

"வன்னிக்கு உள்ளும் வெளியேயுமான குடிமக்கள் நகர்வுகளைக் கட்டுப்படுத்துவது பற்றி தெளிவான உயர் மட்டக் கொள்கையை விடுதலைப்புலி இயக்கம் கொண்டிருந்தது அதன் மூலம் அவர்களின் நகர்வுக்கான சுயாதீனத்திலே சட்டபூர்வமற்ற முறையிலே குறுக்கிட்டுள்ளது" என்பதை அறிக்கை கண்டுள்ளது. இந்தக் கொள்கையானது ஜனவரி 2009ல் மேலும் இறுக்கமடைந்தது. அதன்படி எவருமே விடுதலைப்புலிகளின் கட்டுபாட்டுக்கு உட்படுத்தப்பட்ட பிரதேசத்தைவிட்டு வெளியேற அனுமதிக்கப்படவில்லை. அப்படியாக வெளியேற முயற்சித்த சிறுவர்கள் உட்படப் பலர் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

## பரிந்துரைகள்

இந்த அறிக்கையிலே 39 பரிந்துரைகள் உள்ளன. அவற்றுள் 33 பரிந்துரைகள் இலங்கை அரசாங்கத்துக்கும் ஆறு பரிந்துரைகள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்கும் அதன் அங்கத்துவ நாடுகளுக்குமாகும்.

இந்தப் பரிந்துரைகள் பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளது: நிறுவன சீர்திருத்தம்; நீதி, உண்மை/அறிவதற்கான உரிமை; மற்றும் திருத்தியமைப்புக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவன சீர்த்திருத்தங்கள்

நிறுவன சீர்திருத்தத்தின் கீழான பரிந்துரைகளுள் பல, மக்களுக்கு அரசாங்கம் ஏற்கெனவே வாக்குப் பண்ணி உள்ளவைகளை நிறைவேற்றும் படிக்கானவைகளாகவே உள்ளன. முதலிலே, 19ம் சீர்திருத்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட சட்டமன்றப் பேரவையை இயங்கும்படி செய்யவேண்டும். இரண்டாவதாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவை வலிவூட்டும்படியாக சட்டம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும் எனும் பரிந்துரை.

அறிக்கையானது இராணுவத்திலே சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்காக பல பரிந்துரைகளைச் செய்துள்ளது. இராணுவத்தின் சகல கிளைகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும், சித்திரவதைகள், கற்பழிப்பு, பாலியல் வன்முறைகள், மற்றும் இதர மனித உரிமை மீறல்கள் தடைசெய்யப்பட்டுள்ளன எனும் தெளிவான பகிரங்க அறிவுறுத்தலை அரசாங்கம் விடுக்கவேண்டும் என அது கேட்டுள்ளது. அப்படியான குற்றச்செயல்களை யாராவது செய்தால், அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும். மேலும் மனித உரிமை மீறல்களிலே ஈடுபட்டுள்ள நபர்களைப் பணிநீக்கும் ஒரு உபாயத்திட்டத்தை அரசாங்கம் வகுக்கவேண்டும் எனவும் அது கேட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை இராணுவக் குழுக்களை இனங்கண்டு அவற்றின் ஆயுதக்களைவுக்கு உடனடியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும் அது விடுத்துள்ள மேலதிக பரிந்துரைகளுக்குள் அடங்கும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் அதன் ஒழுங்கு விதிகளையும், மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தையும் அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டும் எனவும், அதன்மூலம் இலங்கையின் தேசிய பாதுகாப்பு வரை அமைப்பானது சர்வதேசச் சட்டத்துக்கு ஒத்துப்போவதாய் இருக்க வேண்டும் எனவும் இலங்கை அரசாங்கத்திடம் அறிக்கை மேலும் கேட்டுக் கொண்டுள்ளது. இறுதியாக அரசாங்கம் தனியார் நிலங்களை மீளளிக்கவேண்டும் எனப் பரிந்துரை செய்துள்ளது.

* இந்தப் பரிந்துரைகளுள் அநேகமானவை, இலங்கையும் ஆதரவு தெரிவித்து மனித உரிமைகள் பேரவையிலே ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## நீதிக்கான உரிமை

அறிக்கையின் பிரதான பரிந்துரையானது, இலங்கை ஒரு கலப்பு நீதிமன்றத்தை அமைக்கவேண்டும் எனும் பரிந்துரையாகும். இலங்கையிலே முழுமையான உள்ளூர் பொறிமுறை நீதியை பெற்றுத்தராது என்பதை அறிக்கை கூறுகிறது. கலப்பு நீதிமன்றம் என்றால் சர்வதேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிபதிகள், வழக்குத்தாக்கல் செய்வோர், சட்டத்தரணிகள், விசாரணையாளர்கள் போன்றோர் உள்ளடங்கலாகச் சர்வசதேப் பணியாளர்களையும் அரசாங்கம் பணிக்க அமர்த்தும்படி ஊக்குவிக்கிறது. இதுதான் இலங்கை ஏற்றுக் கொள்வதற்கு மிகவும் கடினமான பரிந்துரையாகும், ஆயினும் தற்போது அது ஆதரித்த தீர்மானத்திலே இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

சட்டச் சீர்திருந்தம்பற்றிய பல பரிந்துரைகளை அறிக்கை செய்துள்ளது. முதலிலே, அரசாங்கம் பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகொடுப்பவர் பாதுகாப்புச் சட்டத்தை மீளாய்வு செய்யும்படி பரிந்துரைக்கிறது. இரண்டாவதாக, யுத்தக் குற்றச்செயல்களையும், மனுக்குலத்துக்கு எதிரான குற்றச்செயல்களையும் இன அழிப்பையும் திணிக்கப்பட்ட காணாமற் போகப் பண்ணுதல்களையும் குற்றச் செயல்களாக்கும் சட்டமூலத்தை இயற்றும்படிக்கான பரிந்துரையாகும். இதைச் செய்யும்போது, இதிலே சம்பந்தப்பட்ட சிரேஷ்ட அதிகாரிகளும் குடிமக்கள் தலைவர்களும் பொறுப்புக்கூறச்செய்வதை அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும் எனவும் ஊக்குவிக்கப்படுகிறது.

மேலும் ஏற்கெனவே உள்ள பல வழக்குகளை அரசாங்கம் மீளாய்வு செய்யும் படிக்கும் அறிக்கை கேட்டுக் கொண்டுள்ளது. குறிப்பாக, காணாமற்போனோர் பற்றிய விசாரணைக்குழுவினாலும், காணாமற்போன நபர்கள் பற்றிய வலய மற்றும் அகில இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைக்குழுவினாலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல வழக்குகளையும் மீளாய்வு செய்யும்படியாக அரசாங்கம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் தடுத்து வைத்துள்ளோர் பற்றிய வழக்குகளை மீளாய்வு செய்து, அவர்களை விடுவிக்கவோ அல்லது உடனடியாக அவர்களை நீதிமன்றத்திலே முற்படுத்தவோ வேண்டும் என அரசாங்கம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## உண்மைக்கான உரிமை

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமக்கு என்ன நடந்தது எனும் உண்மையை அறியும் உரிமை உள்ளது என்பதை சர்வதேசச் சட்டம் இனங்கண்டுள்ளது. இந்த உரிமைக்கு அனுசரனை வழங்கும்படியாக, அறிக்கை பல்வேறு பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. அவற்றுள் அநேகமானவை காணாமற்போயுள்ளவர்கள் எங்கே என்பது தொடர்பானவையாகும்.

இலங்கை அரசியல்வாதிகளினதும் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களினதும் கோரிக்கைகளுக்கு இசைவாக, காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு, இராணுவ விசாரணை மன்றம், பொதுமக்கள் கொலைகள் தொடர்பான பல அறிக்கைகள் போன்ற முன்னைய பல விசாரணை ஆணைக்குழுக்கள் வழங்கியுள்ள ஆனாலும் புதுப்பிக்கப்படாத அறிக்கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் பதிப்பிக்கவேண்டும் என்பதுவும் ஒரு பரிந்துரையாகும்.

இந்த அறிக்கையானது தடுக்கப்பட்டுள்ள நபர்கள் பற்றிய ஒரு மத்திய தரவுத்தளத்தை அரசாங்கம் நிலைநாட்டவேண்டும் என்று பரிந்துரையும் செய்துள்ளது. இந்தத்தரவுத்தளத்தில் உள்ள தகவல்களின் நம்பகத் தன்மையானது சுயாதீனமாகச் சரிபார்த்துக்கொள்ளப்படல் வேண்டும். தடுப்புக்காவலிலே தடுத்து வைக்கப்பட்டிருந்த தமது உறவுகள் எங்கே என்பதை நபர்கள் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும். மேலும் தடுப்புக்காவல் மையங்கள் பற்றிய ஒரு வர்த்தமானி அறிக்கையை அரசாங்கம் பதிப்பிக்கும்படியும் அறிக்கை கோருகிறது.

## திருத்தியமைப்புக்கள் தொடர்பான உரிமை

மனித உரிமை மீறல்களாயும் துஷ்பிரயோகங்களாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட தீமையைத் "திருந்தியமைப்பதை" திருத்தியமைப்புக்கள் பணி உள்ளடக்கியது. அவை பண நஷ்ட ஈடு, சட்டச் சீர்திருத்தங்கள் மற்றும் அடையாள நடவடிக்கைள் போன்றவற்றையும் உள்ளடக்கியது. அரசாங்கம் ஒரு தேசிய திருத்தியமைப்புக்கள் கொள்கையை வகுத்து, அந்தக் கொள்கைக்கு வேண்டியதான பாதீட்டையும் அரசாங்கமே வழங்க வேண்டும் எனவும் அறிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிந்துரை செய்கிறது. யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளசமூக ஆதரவுக்கான வலிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தியாக்கும் படியாக அரசிடம் அறிக்கை பரிந்துரை செய்கிறது. மேலும் இடம் பெயர்ந்த மக்கள் கூட்டத்தினருக்கு நிலைநிற்கும் தீர்வினை அரசாங்கம் கண்டு கொள்ளும்படிக்கான பல பரிந்துரைகளை இந்த அறிக்கை கொண்டதாகயாகவும் அறிக்கை பரிந்துரை செய்கிறது.

## முடிவு

இந்த அறிக்கையானது நேர்மையானதாயும் நடு நிலையானதாயும், பாதிக்கப்பட்டோர் விடுத்த பல கோரிக்கைகள் பற்றிய அதன் பல பரிந்துரைகளையும் உள்ளடக்கியது. இதிலே ஊக்கம் தரும் ஒரு விடயம் எதுவெனில், இலங்கையின் ஆதரவுடன் மனித உரிமைகள் பேரவை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளமையும், இலங்கையை அதன் பரிந்துரைகள அமுல்படுத்தும்படி கோரியுள்ளமையும், கலப்பு நீதிமன்றத்தின் தேவைகளைச் சுட்டிக் காட்டுவதாயும், வெறுமனே இலங்கைச் சட்டத்தை மாத்திரமின்றி சர்வதேசச் சட்டத்தையும் பிரயோகிக்கும் படிக்கும் உள்ளன. இந்த அறிக்கையும் தீர்மானமும் பாதிக்கப்பட்டோருக்கான நீதிக்கான போராட்டத்திலே ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org